DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

OS1776/2023

Deposition of witness

Name : B.Rajeswari PW1

Husband Name : Surendaran

Age/Sex :

Adress : No.15, Ramanujam Street, T.Nagar, Chennai 600 017

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of August 2024

---

**22.08.2024**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது இல்லத்தரசியாக தான் இருக்கிறேன். நான் திநகரில் வசித்து வருகிறேன். எனக்கு 1995 ல் திருமணம் ஆகி விட்டது. என் அப்பாவுடன் சேர்த்து 3 பிள்ளைகள்,அவருக்கு ஒரு அண்ணன் மற்றும் ஒரு தம்பி. என் அப்பா துணி கடை வைத்திருந்தார் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். துணிக்கடை எனது பெரியப்பா,சித்தப்பா எல்லோரும் கூட்டாக சேர்ந்து நடத்தி வந்தார்கள். எனக்கு அந்த வியாபாரத்திற்கு பார்ட்னர்ஷிப் பத்திரம் உள்ளதா என தெரியாது. நான் பிறந்தது முதல் கடை நடத்தி வருகிறார்கள். எந்த ஆண்டு ஆரம்பித்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு அந்த வியாபாரம் சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. என் தாத்தா தான் அந்த வியாபாரத்தை ஆரம்பித்தாரா என்றால் எனக்கு தெரியாது. என் தாத்தாவும் எனது பெரியப்பாவும் தான் இந்த வியாபாரத்தை ஆரம்பித்தார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 1970ம் ஆண்டு எனது அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் மற்றும் என் தாத்தா ஆகியோர் சேர்ந்து ஒரு பார்ட்னர்ஷிப் பத்திரம் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. பாலாஜி என்பவர் என்னுடைய பெரியப்பா மகன் என்றால் சரிதான். 1990ம் ஆண்டு இன்னொரு பார்ட்னர்ஷிப் பத்திரம் போடப்பட்டது என்றாலும் அதில் என்

அப்பா அவருடைய 2 சகோதரர்கள் 2ம் பிரதிவாதி மற்றும் பாலாஜி ஆகியோர் பங்கு தாரர்களாக இருந்தார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தந்தை 2012 ம் ஆண்டு காலமானார். 2012 ல் என் தந்தை இறந்த பின்பு அவருடைய சகோதரர்கள் 2ம் பிரதிவாதி, பாலாஜி மற்றும் கார்த்திகேயன் இன்னொரு பார்ட்னர்ஷிப் பத்திரம்போட்டார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் பிறந்து வளர்ந்தது 22 ஈவிகே சம்பத் சாலையில் உள்ள எனது பெரியப்பா வீட்டில் தான். அதன்பின் தாவா சொத்திற்கு நான் குடிவந்து விட்டேன். அதன்பின் மீண்டும் நான் என் பெரியப்பா வீட்டிற்கே சென்று விட்டேன். அதன்பின் திருமணம் ஆன பின் என் கணவர் வீட்டிற்கு சென்று விட்டேன். ஈவிகே சம்பத் சாலையில் தான் எங்கள் குடும்பம்,பெரியப்பா குடும்பம்,சித்தப்பா குடும்பம் இருந்தோம். பின்பு நாங்கள் தாவா சொத்திற்கு ஒரு சில காலம் வந்து விட்டு மீண்டும் பெரியப்பா வீட்டிற்கே சென்று விட்டோம். திருமணத்தின் போது எனக்கு 25 பவுன் நகை போட்டார்கள். என்னுடைய சகோதரிகளுக்கும் மற்றும் என் அன்னிக்கும் 25 பவுன் தான் போட்டார்கள். என் திருமணத்திற்கு 150 பவுன் நகை போட்டார்கள் என்றால் அது தவறு. என்னுடைய அப்பா மற்றும் அவருடைய சகோதரர்களுக்கும் தாராபுரத்தில் கூட்டாக ஒரு சொத்து உள்ளது. அது சம்மந்தமாக சொத்தை பிரித்து கொடுக்க சொல்லி நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அதில் நான் தரப்பினராக உள்ளேன். நிர்மலா ஸ்டோர்ஸ் மற்றும் நிர்மலா டெக்ஸ்டைல்ஸ் என்று ஒரே ஒரு கடை தான் இருந்தது. அந்த சொத்திற்கும் எனக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லாததால் நான் அதில் எந்த உரிமையும் கோரவில்லை. (டிரான்ஸ்பர் சிஎம்பி 551/2024, 22.07.2024 இதில் உள்ள 7ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்நீதிமன்ற உத்தரவை குறித்து உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய இரண்டாம பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கினங்க ஒத்தி வைக்கப்படுகிறது)

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt.22.08.20242. II Addl. District Judge.